சமூக வலைதளங்களில் "வைரல்" ஆன ருசிகரங்கள்

ஓடும் ரெயிலின் ஸ்லீப்பர் கோச்சை குளியலறையாக மாற்றிய வாலிபர்

ஓடும் ரெயிலின் ஸ்லீப்பர் கோச் பெட்டியில் இருக்கைகளுக்கு அருகே நடைபாதையில் ஒரு வாலிபர் குளித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த சம்பவம் உத்தரபிரதேச மாநிலத்தில் நடந்துள்ளது. அங்குள்ள ஜான்சி பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் ஓடும் ரெயிலில் ஸ்லீப்பர் கோச்சில் வாளியில் தண்ணீர் கொண்டு வந்து குவளை மூலம் எடுத்து தனது தலையில் ஊற்றி குளிக்கிறார். மேலும் அவர் சோப்பு, ஷாம்பு பயன்படுத்தி குளிப்பது போன்றும் காட்சிகள் உள்ளது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி 2.6 லட்சத்திற்கும் அதிகமான பார்வைகளை பெற்றது. வீடியோவை பார்த்த நெட்டிசன்கள் பலரும் வாலிபரின் செயலை விமர்சித்து பதிவிட்டனர். இதற்கிடையே ரெயில்வே அதிகாரிகள் விசாரணை நடத்தியதில் அந்த வாலிபர் ஜான்சி பகுதியை சேர்ந்த பிரமோத் ஸ்ரீவாஸ் என்பது தெரியவந்தது. அவர் சமூக வலைதளங்களில் புகழ்பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு குளித்து ரீல் வீடியோ எடுத்து பதிவிட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர். மேலும் சமூக வலைதள புகழுக்காக வரம்புகளை மீறக்கூடாது என அதிகாரிகள் எச்சரித்தனர்.

கார் கண்ணாடியில் இருந்து பாய்ந்த பாம்பு

குளிர் மற்றும் மழை காலங்களில் பாம்புகள் வெப்பம் தேடி வாகனங்களுக்குள் தஞ்சமடையும் சம்பவங்கள் நிகழ்ந்தது உண்டு. இந்நிலையில் தமிழ்நாட்டின் நாமக்கல்–சேலம் சாலையில் கார் ஓட்டி சென்ற ஒருவர் காரின் கண்ணாடியில் பாம்பு இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகியது. அதில், கார் டிரைவர் நெடுஞ்சாலையில் கார் ஓட்டி செல்கிறார். அப்போது காரின் பக்கவாட்டு கண்ணாடியில் ஏதோ அசைவு இருப்பதை கண்டார். அப்போது கண்ணாடியின் மறைவில் இருந்து ஒரு பாம்பு வெளியே வருவதை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக அவர் காரை நிறுத்தி விட்டு அதில் இருந்து வெளியேறினார். பின்னர் அவ்வழியே சென்றவர்கள் வன விலங்கு மீட்புக்குழுவினருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த குழுவினர் அந்த பாம்பை பாதுகாப்பாக மீட்டு கொண்டு சென்றனர். இதுகுறித்த காட்சிகள் எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டது. குளிர் மற்றும் மழைக்காலங்களில் வாகன உரிமையாளர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இந்த வீடியோ காட்டுவதாக பலரும் பதிவிட்டனர்.

சிறுத்தையிடம் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பிய போலீஸ்காரர்

மராட்டிய மாநிலம் கோலாப்பூர் பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் அதிகம் உள்ளது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அரசு அலுவலகம் அருகே சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக போலீசாருக்கு தகவல் வந்தது. உடனே போலீசாரும், வனத்துறையினரும் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் சிறுத்தையை பிடிக்க போராடினர். அப்போது எதிர்பாராதவிதமாக சிறுத்தை போலீஸ்காரர் ஒருவர் மீது பாய்ந்து தாக்கியது. இதில் அவர் காயம் அடைந்தார். எனினும் அவர் சுதாரித்து கொண்டு தனது கையில் இருந்த கம்பு மற்றும் கம்பிகளால் தாக்கியதால் சிறுத்தை அங்கிருந்து சென்றது. இதற்கிடையே சிறுத்தையை கண்ட 2 போலீசார் அங்கிருந்து தப்பி ஓடினர். இதுகுறித்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகியது.

4 ஆண்டாக நாணயங்கள் சேமித்து மகளுக்கு ஸ்கூட்டர் வாங்கிய டீ வியாபாரி

மேற்கு வங்க மாநிலம் மிட்னாப்பூர் அருகே உள்ள மவுலா பகுதியை சேர்ந்தவர் பச்சு சவுத்ரி. இவர் டீ வியாபாரம் செய்து வருகிறார். இவர் சம்பவத்தன்று ஒரு பெரிய டிரம்முடன் ஸ்கூட்டர் ஷோரூமுக்கு சென்றார். அங்கிருந்த ஊழியர்களிடம் எனது மகளுக்கு புது ஸ்கூட்டர் வேண்டும் என கூறிய அவர், அதற்கான தொகையாக நான் 4 ஆண்டுகளாக சேமித்து வைத்த நாணயங்களை பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். ஷோரூம் ஊழியர்கள் ஒன்று சேர்ந்து நாணயங்களை தரையில் கொட்டி எண்ணத்தொடங்கினர். 2 மணிநேரமாக நடந்த நாணயங்கள் எண்ணும் பணியின் முடிவில் மொத்தத்தில் ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் நாணயங்கள் இருந்தது. அவற்றை பெற்றுக்கொண்டு ஸ்கூட்டர் வழங்கினர். இதுகுறித்து பச்சு சவுத்ரி கூறுகையில், சில ஆண்டுகளுக்கு முன்பு எனது மகள் ஸ்கூட்டர் வாங்கித்தருமாறு கேட்டார். அப்போது அவரது ஆசையை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் நாணயங்கள் சேகரிக்க தொடங்கினேன். தற்போது அவரது ஆசையை நிறைவேற்றி விட்டேன் என்றார்.

ராஜபாளையம்: காவலாளிகளை கொன்று கோவில் நகை கொள்ளை

தப்ப முயன்ற கொள்ளையனை சுட்டுப்பிடித்த இன்ஸ்பெக்டர்

அரிவாளால் வெட்டியதில் சப்-இன்ஸ்பெக்டர் காயம்

ராஜபாளையம், நவ.12– விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தேவதானம் வனப்பகுதியில் தவம் பெற்ற நாயகி உடனுறை நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவில் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் நள்ளிரவில் புகுந்த கொள்ளையர் கள் பணியில் இருந்த காவலாளிகளான பேச்சிமுத்து, சங்கரபாண்டியன் ஆகிய இருவரையும் வெட்டிக்கொலை செய்தனர். மேலும் அங்கிருந்த உண்டியலை உடைத்து நகை, பணத்தை திருடிச் சென்றனர்.

இதில் தொடர்புடைய நபர்களை பிடிக்க 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. சந்தேகத்தின் பேரில் 3 வாலிபர்களை போலீசார் பிடித்து விசாரித்து வந்தனர். இதில் தேவதானத்தைச் சேர்ந்த நாகராஜ் (வயது 25) என்பவரிடம் நடந்த விசாரணையில் காவலாளிகளை கொன்று உண்டியலை கொள்ளை அடித்ததை ஒப்புக்கொண்டார். மேலும் அவருடன் சேர்ந்து முனியாண்டி (30) என்பவரும் சம்பவத்தில் ஈடுபட்டதும் தெரிந்தது.

துப்பாக்கி சூட்டில் காயம் அடைந்த கொள்ளையன் நாகராஜ், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் காட்சி.

துப்பாக்கி சூடு

இதற்கிடையே இன்று காலை 6 மணி அளவில் சேத்தூர் அருகே உள்ள அசையாமணி விலக்கில் இருந்து மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் கல்லணை அஞ்சநேயர் கோவில் அருகே கொள்ளையடித்த பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக நாகராஜ் கூறினார். அதனை கைப்பற்றுவதற்காக சேத் தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஷ் கண்ணா, சப்–இன்ஸ்பெக்டர் கோட்டைச் சாமி மற்றும் போலீசார் அவரை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு கல்லணை பகுதிக்கு சென்றனர்.

அங்கு சென்றவுடன் புதைத்து வைத்திருந்த இடத்தின் அருகே நாகராஜ் திடீரென்று அரிவாளை எடுத்து சப்–இன்ஸ்பெக்டர் கோட்டைச்சாமியின் தோள் பட்டையில் வெட்டி தப்பி ஓட முயன்றார். உடனே அருகில் இருந்த இன்ஸ்பெக்டர் ரமேஷ் கண்ணா, நாகராஜின் வலது முழங்காலுக்கு கீழே துப்பாக்கியால் சுட்டார். இதில் சுருண்டு விழுந்த அவரை போலீசார் சுற்றிவளைத்து பிடித்தனர். இதில் படுகாயம் அடைந்த சப்–இன்ஸ்பெக்டர் கோட் டைச்சாமி மற்றும் துப்பாக்கி குண்டு பாய்ந்த நாகராஜ் ஆகிய இருவரும் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இது குறித்து சேத்தூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற் கொண்டுள்ளனர். விருதுநகர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கண்ணன் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகிறார். கோவிலில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளை சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியான முனியாண்டியை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.



அரிவாள் வெட்டில் காயம் அடைந்த சப்–இன்ஸ்பெக்டர் கோட்டைச்சாமி

கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோவிலில் தேர் திருவிழா நடைபெற்றபோது எடுத்த படம்.

கோவில்பட்டி

செண்பகவல்லி அம்மன் கோவிலில் தேர் திருவிழா

கோவில்பட்டி,நவ.12– கோவில்பட்டி செண்பக வல்லி அம்மன் உடனுறை பூவனநாத சாமி கோவில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா சென்ற வாரம் கொடி ஏற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மண்டகப்படி மண்டகப்படிதாரர்கள் சார்பில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாளும் அம்மன் பல்லக்கில் வீதிஉலா வந்து காட்சி கொடுத்தார்.

இன்று 9–ம் நாள் மண்டப படித்தார்கள் கோவில்பட்டி வணிக வைசிய செட்டியார் சங்கம் சார்பில் தேரோட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வணிக வைசிய செட்டியார் சங்க தலைவர் வெங்கடேஷ் தலைமை தாங்கினார். தேரோட்டத்தை முன்னிட்டு இன்று அதி காலை கோவில் நடை திறக்கப்பட்டு சுவாமி–அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கோவில்பட்டி எம்.எல்.ஏ. கடம்பூர் ராஜூ, நகர மன்ற தலைவர் கருணாநிதி, ஆயிர வைசிய காசுக்கார செட்டி பிள்ளைகள் சங்கத் தலைவர் வெங்கட கிருஷ்ணன், சைவ செட்டியார் சங்கத் தலைவர் சிவபிரகாசம், 24 மனை தெலுங்கு செட்டியார் சங்கத் தலைவர் செல்வராஜ், வணிக வைசிய செட்டியார் சங்க செயலாளர் வேல்முருகன், பொருளாளர் தங்கமாரியப்பன், துணைத் தலைவர் பரமசிவம், முன்னாள் தலைவர்கள் பூவலிங்கம், காளியப்பன், முன்னாள் செயலாளர் பழனிகுமார், சங்க நிர்வாகிகள் மாதவராஜ், நம்பிராஜன், சின்னத்துரை, முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் ரத்தினவேல், செண்பகவல்லி அம்மன் கோவில் அறங்காவலர் குழு ராஜகுரு, திருப்பதிராஜா, ரவிச்சந்திரன், சண்முகராஜா, மற்றும் வணிக வைசிய சங்க செட்டியார் சங்க நிர்வாகிகள், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி– அம்பாளை தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை 9–ம் திருநாள் மண்டப படி தாரர்கள் கோவில்பட்டி வணிக வைசிய செட்டியார் சங்கம் சார்பில் செய்திருந்தனர்.

தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில்

தொழிலாளர்களை குறி வைத்து கஞ்சா விற்ற 4 பேர் கைது

மோட்டார் சைக்கிள் பறிமுதல்

தூத்துக்குடி, நவ.12– தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில் சிலர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வருவதாக தெர்மல்நகர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து சப்–இன்ஸ்பெக்டர் அய்யம்பிள்ளை தலைமையிலான போலீசார் தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது தெர்மல்நகர் கேம்ப்–1, மேற்கு புறம் பாலம் ஏறும் இடத்தில் சர்வீஸ் சாலையில் மோட்டார் சைக்கிளில் நின்றபடி சிலர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு கொண்டிருந்ததை பார்த்து அவர்களை சுற்றி வளைத்தனர்.

போலீசாரை கண்டதும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடினர். அவர்களை சுற்றி வளைத்து போலீசார் பிடித்தனர். அப்போது ஒரு இளைஞர் தப்பி ஓட்டம் பிடித்தார்.

போலீசார் பிடியில் சிக்கியவர்களிடம் இருந்த மோட்டார் சைக்கிளில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் இருந்த 4 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து பிடிபட்டவர்களிடம் போலீசார் மேற்கொண்ட விசாரணையில் அவர்கள் தெர்மல் கோவில்பிள்ளை நகர் அருகே உள்ள பண்டுக்கரையை சேர்ந்த கொலை வழக்கில் கைதாகி குண்டர் சட்டத்தில் சிறையில் இருந்து வெளிவந்த ரிதன் (வயது 21), சதீஷ் (22) மற்றும் 15,17 வயதுடைய 2 இளஞ்சிறார்கள் என்பதும், இவர்கள் மீது ஏராளமான வழிப்பறி வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு இருப்பதும் தெரிய வந்தது.

அவர்களை கைது செய்த போலீசார், அவர்களிடம் மொத்தமாக கஞ்சாவை கொடுத்து விற்பனை செய்ய வைத்தவர்கள் யார்? என்பது குறித்து இன்ஸ்பெக்டர் சோபா ஜென்சி தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் தப்பி ஓடிய 15 வயது இளஞ்சிறாரை தேடி வருகின்றனர். தூத்துக்குடி துறைமுகம், அனல் மின் நிலைய பகுதியில் தமிழக மற்றும் வட மாநிலத்தை சேர்ந்த பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி செய்து வருகின்றனர். அவர்களை குறி வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்ய வேண்டும் என்று துறைமுகப் பகுதி தொழிலாளர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லை ரெயில் நிலையம் முன்பு தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது எடுத்தபடம்.

தீவிர வாக்காளர் திருத்த பணியை கண்டித்து

நெல்லை மாவட்ட தி.மு.க -கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம்

நெல்லை, நவ.12– தமிழகத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணியை கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தையும், மத்திய அரசையும் கண்டித்து தமிழகம் முழுவதும் நேற்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன்படி நெல்லை மாவட்டத்தில் சந்திப்பு ரெயில் நிலையம் முன்பு தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்ட செயலாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்ட செயலாளர் கிரகாம்பெல் ஆகியோர் தலைமை தாங்கினர்.

முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ மனோஜ் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் திருத்த பணியை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தலைமை செயற்குழு உறுப்பினர் வக்கீல் பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, வக்கீல் அணி மாவட்ட அமைப்பாளர் செல்வ சூடாமணி, பேரூராட்சி தலைவர்கள் தமயந்தி, வக்கீல் சித்தார்த் சிவா, நகர செயலாளர்கள் கணேசன், பிரபாகர பாண்டியன், பேரூர் செயலாளர் இசக்கி பாண்டியன், ஒன்றிய செய லாளர்கள் பரணி சேகர், செல்லதுரை, வக்கீல் சிவக்குமார், முக்கூடல் பேரூர் செயலாளர் லட்சும ணன், பாப்பாகுடி ஒன்றிய செயலாளர் மாரி வண்ண முத்து, ஒன்றிய கவுன்சிலர் சங்கீதா சுதாகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், வள்ளியூர் யூனியன் சேர்மன் ராஜா ஞானதிரவியம், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், கே.எஸ்.டி. சுபாஷ் தங்க பாண்டியன், ஆரோக்கிய எட்வின், ஆர்.எஸ். சுடலைக் கண்ணு, வி.எஸ்ஆர்.ஜெக தீஷ், அலெக்ஸ் அப்பாவு, பேரூராட்சி தலைவர்கள் தஸ்லீமா அபூக்கான், பார்வதி மோகன், கல்யாணி வானுமாமலை, பாளை யூனியன் சேர்மன் வக்கீல் முரளிதரன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் நெல்லை ஏ.ஆர்.ரகுமான், மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் கீழ நத்தம் பஞ்சாயத்து தலைவர் அனுராதா ரவிமுருகன், தொண்டரணி துணை அமைப்பாளர் சிவந்திப்பட்டி இசக்கிபாண்டியன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜூ, கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வரிய தலைவர் விஜிலா சத்யானந்த், பகுதி செயலாளர்கள் தச்சை சுப்பிரமணியன், அண்டன் செல்லத்துரை, மாநகர செயலாளர் வக்கீல் தினேஷ், இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது மீரான் மைதீன், விளையாட்டு மேம்பாட்டு பிரிவு துணை அமைப்பா ளர்கள் பல்லிக்கோட்டை செல்லத்துரை, வீர பாண்டி யன், மத்திய மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், வட்ட செயலாளர் மேகை செல்வம், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டணி கட்சியான காங்கிரஸ் சார்பில் மாநகர் மாவட்ட தலைவர் சங்கர பாண்டியன், ம.தி.மு.க. சார்பில் மாவட்ட செயலா ளர் நிஜாம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் முகமது கடாபி, எல். கே.எஸ் மீரான், மார்க்சிஸ்ட் கம்யு னிஸ்ட் சார்பில் ஸ்ரீராம், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் சடையப்பன், சி.ஐ.டி.யு. சார்பில் முருகன் மற்றும் தமிழர் வாழ்வுரிமைக் கட்சி, மக்கள் நீதி மய்யம், ஆதித் தமிழர் பேரவை உள்பட கூட்டணி கட்சியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாலி நாட்டில் கடத்தப்பட்ட

கடையநல்லூர் வாலிபர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அ.தி.மு.க. சார்பில் தென்காசி கலெக்டரிடம் மனு

தென்காசி, நவ.12– தென்காசி வடக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், கடையநல்லூர் எம்.எல்.ஏ.வுமான கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா, தென்காசி மாவட்ட கலெக்டர் கமல் கிஷோரிடம் கோரிக்கை மனு அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:–

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலி நாட்டில் மேற்கு பகுதியில் கோப்ரி நகரத்தில் பணியில் ஈடுபட்டிருந்த போது அங்குள்ள உள்நாட்டு பிரச்சினை காரணமாக பயங்கர ஆயுதமேந்திய தீவிரவாதிகள் 5 பேரை கடத்தி சென்றதாக தகவல்கள் வந்துள்ளன. அதில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடைய நல்லூர் முத்துகிருஷ்ணாபுரம் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த இசக்கிராஜா (வயது 36) மற்றும் புதுக்குடி ஊராட்சி கண்மணியாபுரம் பகுதியை சேர்ந்த சுரேஷ் (26) என்பவரையும் கடத்தி சென்றதாக தெரியவருகிறது.

எனவே நமது தூதரகம் மூலம் கடத்தி சென்றவர்களிடம் இருந்து அவர்களை பத்திரமாக மீட்டு தாய்நாட்டிற்கு அழைத்து வந்து அவர்களுடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்க துரித நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அப்போது அண்ணா தொழிற்சங்க பேரவை துணை செயலாளர் கந்தசாமி பாண்டியன், மாவட்ட அவைத்தலைவர் வி.பி.மூர்த்தி, துணை செயலாளர் பொய்கை மாரியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த மனுவினை பிரதமர், வெளியுறவுத்துறை மந்திரி, வெளியுறவுத்துறை செயலாளர் மற்றும் முதல்–அமைச்சர் ஆகியோருக்கும் மின்னஞ்சல் மூலமாக கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா எம்.எல்.ஏ. அனுப்பி உள்ளார்.

மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பரமக்குடி
A.S.No. 12/2025 IN O.S.No.169/2017

G. நற்குணசீலன் மற்றும் ஒருவர்
–மேல்முறையீட்டாளர்கள்
–எதிரிடை–
உமாராணி மற்றும் 3 நபர்கள்
–எதிர்மனுதாரர்கள்

3. திரு.பாலமுருகன், த/பெ. ராசு, முள்ளிக்குளம், சிவகிரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.
–3ம் எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுவில் மனுதார்கள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கில் தாங்கள் ஆஜராக 27.11.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்களது தரப்பு ஆட்சேபணையை தாங்களோ/தங்களது வழக்கறிஞர் மூலமோ தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கெதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கலாயிற்று.

B. RAMASUBRAMANIAN, B.Com., B.L.,
B. RAMASUBRAMANIAN,
B.Com.,B.L.,
Advocates, Madural.

விடிஎம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர் CIN No.: L17111TN1946PLC003270 www.vtmill.com

30.09.2025 வரை முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	30.09.2025 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	30.06.2025 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	சென்ற 30.06.2025 அன்று முடிந்த 6 மாதங்களுக்கு (தணிக்கை செய்யப்படாதது)	சென்ற 30.09.2024 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	சென்ற 30.06.2024 அன்று முடிந்த 6 மாதங்களுக்கு (தணிக்கை செய்யாதது)	31.3.2025 ஆண்டு முடிவு (தணிக்கை செய்யப்பட்டது)
1	தொழிலில் இருந்து மொத்த வருமானம்	9,104.00	7,285.37	16,389.37	7,524.58	13,572.76	34,935.19
2	அசாதாரண விஷயங்களுக்கு முன்பு லாபம் (வரிக்கு முன்)	291.02	610.65	901.67	1,284.36	2,000.31	6,051.55
3	அசாதாரண விஷயங்களுக்கு பின்பு லாபம் (வரிக்கு முன்)	291.02	610.65	901.67	1,284.36	2,000.31	6,051.55
4	அசாதாரண விஷயங்களுக்கு பின்பு லாபம் (வரிக்கு பின்)	232.22	460.47	692.69	977.03	1,500.33	4,537.41
5	இதர மொத்த வருமானம் (வரி நிகர)	122.61	125.79	248.40	94.35	185.71	206.19
6	மொத்த விரிவான வருமானம் மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பின்)	354.83	586.26	941.09	1,071.38	1,686.04	4,743.60
7	செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம்	1,005.69	1,005.69	1,005.69	402.28	402.28	402.28
8	ரிசர்வுகள், மறு ஆய்வு ரிசர்வுகள் நீங்கலாக	NA	NA	NA	NA	NA	30.240.15
9	அசாதாரண விஷயங்களுக்கு முன் ஒரு பங்கு பத்தீரத்திற்கு (ரூபாயில்)						
	பேசிக்	0.23	0.46	0.69	0.97	1.49	4.51
	டைலூட்டட்	0.23	0.46	0.69	0.97	1.49	4.51

குறிப்பு: (1) மேற்குறிப்பிட்ட 30.09.2025 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் 6 மாதத்திற்க்கான நிதிநிலை அறிக்கை தணிக்கை குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டு 10.11.2025 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தணிக்கையாளர்கள் லிமிடெட் ரெவ்யூ ரிப்போர்ட்டில் தங்களது மாற்றமில்லாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (2) மேற்கூறிய முடிவுகள் கம்பெனிகள் (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) படியும். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133-ன் படியும் தயாரிக்கப்பட்டுள்ளது. (3) தணிக்கை செய்யப்படாத காலாண்டு மற்றும் 6 மாதத்திற்க்கான முடிவுகள், SEBI (LODR) 2015 விதிகள் 33ன் படி பங்கு பரிவர்த்தனை மையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த முழு விரிவாக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. BSE-ன் இணையதள முகவரி www.bseindia.com மற்றும் கம்பெனி இணையதள முகவரி www.vtmill.com-யிலும் காணலாம்.

இடம்: கப்பலூர், மதுரை
தேதி: 10.11.2025

விடிஎம் லிமிடெட்டிற்காக,
க.தியாகராசன்
தலைவர் & நிர்வாக இயக்குநர்